செ.வெ.எண் 54 நாள்: 21.11.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**அன்னமங்கலம் சிறுமலர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப. அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி, இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2022-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது பூர்த்தியடைந்துள்ள நபர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கும், வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி திருத்தம் உள்ளிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளவும் 01.11.2021 முதல் 30.11.2021 வரை விண்ணப்பங்கள் பெற ஆணையிட்டுள்ளது.

அதனடிப்படையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணிக்காக **13.11.2021** மற்றும் **14.11.2021** ஆகிய தேதிகளில் நடைபெற்ற சிறப்புமுகாம்களில் **பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதியிலும்** படிவம் 6-ன்படி 5544 மனுக்களும், படிவம் 7-ன்படி 409 மனுக்களும், படிவம் 8-ன்படி 1147 மனுக்களும், படிவம் 8ஏ-ன்படி 478 மனுக்களும் என மொத்தம் 7578 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து **20.11.2021** மற்றும் **21.11.2021** ஆகிய தேதிகளில் நடைபெற்ற சிறப்புமுகாம்களில் **பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதியிலும்** படிவம் 6-ன்படி **2469** மனுக்களும், படிவம் 7-ன்படி **291** மனுக்களும், படிவம் 8-ன்படி **861** மனுக்களும், படிவம் 8ஏ-ன்படி **228** மனுக்களும் என மொத்தம் **3849** மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அடுத்த சிறப்பு முகாம் 27 மற்றும் 28 ம் தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்திட தேர்த்தல் ஆணையத்தால் உத்திரவிடப்பட்டுள்ளது.

எனவே பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், வருகின்ற 27 மற்றும் 28 ம் தேதியில் நடைபெற உள்ள கூடுதல் சிறப்பு முகாம்களில் அனைத்து வாக்காளர்களும் உரிய ஆவணங்களுடன் நேரில் அனுகி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்திட விண்ணப்பத்தை பெற்று உடன் தாக்கல் செய்து கொள்ளலாம். மேலும், வாக்காளர்கள் www.nvsp.in என்ற இணையதள முகவரியிலும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்த பணிகள் குறித்து வாக்காளர்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் மற்றும் குறைபாடுகள் இருப்பின் **1950** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலோ அல்லது **04328- 225888** என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது **er22maptk@gmail.com** என்ற இமெயில் மூலமாகவோ அரசியல் கட்சியினர் மற்றும் வாக்காளர் பொதுமக்கள் தொடர்பு கொண்டு பயன்பெறலாம். சிறப்பு முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்களை உரிய காலத்தில் கள ஆய்வு மேற்கொண்டு வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்களின் பெயர்களை சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவா் திருமதி ப. ஸ்ரீவெங்கடபிரியா இ.ஆ.ப., அவா்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், பெரம்பலூர்.**